

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றிய, நகர இளைஞர்கள் ஒன்றிணைந்து நடத்திய ஜென் ஜி மீட் அப் நிகழ்ச்சியில் தி.மு.கழக கல்வியாளர் அணி துணைச் செயலாளர் அனிச்சம் கனிமொழி, கழக இளம் பேச்சாளர்கள் மோகநிதி, நாகராஜ் ஆகியோர் கழக கொள்கைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் உள்பட ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### 125 ஆண்டுகளை கடந்த கும்பகோணம் பரஸ்பர

# சகாய நிதி நிறுவனத்தின் 153 - 154 வது கிளை திறப்பு!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம் பங்கேற்பு!

தஞ்சாவூர் ஆக.23–

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் 125 ஆண்டுகாலமாக செயல்பட்டு வரும் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி நிறுவனத்தின் 153 வது கிளை சோழபுரத்திலும் மற்றும் 154 வது கிளை பெருமாண்டியிலும் திறப்பு விழா நடைபெற்றது.

கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்டு கடந்த 125 ஆண்டுகளை கடந்து தமிழகம் முழுவதும் கிளைகள் அமைத்துள்ள கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி நிறுவனத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாண சுந்தரம் தலைவராகவும், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் துணைத் தலைவராகவும், முன்னாள் எம்.எல்.ஏ சாக்கோட்டை க. அன்பழகன் மூத்த இயக்குனராகவும் மேலும் கழக முன்னோடிகள் இயக்குனராகவும் இருந்து இந்ந நிதி நிறுவனத்தை சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

தற்போது 152 கிளைகளுடன் இருந்த இந்த நிறுவனம் கும்பகோணம் அருகே உள்ள சோழபுரத்தில் அவர்களது 153 கிளை மற்றும் பெருமாண்டி கிராமத்தில் 154 கிளைகளை நிறுவியது.



கிளைகள் திறப்பு விழாவில் நிதி நிறுவனத் தலைவர் சு.கல்யாண சுந்தரம் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், நிதி நிறுவன எம்.டி வேலப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார்.

சோழபுரத்தில் 153வது கிளையை நிதி நிறுவனத்தின் இயக்குனர் அம்பிகா மற்றும் சோழபுரம் பேரூராட்சி தலைவர் கமலா செல்வமணி ஆகியோர் திறந்து வைத்தனர். பின்னர் பாதுகாப்பு பெட்டக அறையை கே.எம்.பி.எப். தொமுச துணைத் தலைவர் வி. ரவிசந்திரன் திறந்து வைத்தார்.

பெருமாண்டி சாகாஜி நாயக்கன் தெருவில் 154–வது கிளையை ஆடிட்டர் கணேசன் திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து தொழிலதிபர் ஓ. வி.கிருஷ்ணசாமி பாதுகாப்பு பெட்டக அறையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கும்ப கோணம் மாநகர மண்டலக்குழு தலைவர் ஆர்.அசோக்குமார், ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர், மாநகர நிலைக்குழு தலைவர் சோடா இரா. கிருஷ்ணமூர்த்தி, நிதி நிறுவன இயக்குனர்கள் எஸ்.இரவிச் சந்திரன், துரைராஜ், குரு பிரசாத், பொது மேலாளர்கள் வெங்கடேசன், சண்முகம், துணை பொது மேலாளர் கருணாநிதி, தொமுச நிர்வாகிகள் மாடாகுடி செல்வராஜ், கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி நிறுவன தொ.மு.ச. நிர்வாகிகள் பாரி, செந்தில் ஆறுமுகம், ரமேஷ், ஓ.வி. கிருஷ்ண சா மி குடும்பத்தி னர் பங்கேற்றனர்.







அன்புள்ள அப்பா...

23.08.2026 (1951 - 2020)

ஆறாம் ஆண்டு நினைவு நாள்



முன்னாள் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் (1989 – 1991)
முன்னாள் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட துணைச் செயலாளர்
முன்னாள் பொன்னமராவதி ஒன்றிய பெருந்தலைவர் (1986 – 1991)

திராவிட இயக்க தீரர், கழக முன்னணி கள வீரர்

திரு. ஆலவயல் சுப்பையா B.A.,Ex.MLA., அவர்கள்

நிலத்தில் நிற்கிறேன் என் நீலவானம் நீங்கள்! களத்தில் நிற்கிறேன் என் தன்மானம் நீங்கள்!
இன்று நீங்கள் இருந்திருந்தால், என் கட்சிக்காரன் என என்னையும் இறுக அணைத்திருப்பீர்கள்.
திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்பாக உயிர்த்தொண்டனாக உங்களுக்கும் சேர்த்தே உழைக்கிறேன் அப்பா !

தந்தை வழியில் தனயனாய், தலைவர் வழியில் தொண்டனாய்...

ஆலவயல்முரளிசுப்பையா MCA.,

குடும்பத்தினர் மற்றும் கழகத்தினர்


### பட்டுக்கோட்டையில் – கழகத் தோழர்கள்

# கே.வெங்கடேசன் இல்லத் திருமணம்! பொன். இரமேஷ் இல்லம் திறப்பு! எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று வாழ்த்துகிறார்!

## கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

பட்டுக்கோட்டை,ஆக.23-

இன்று (23.08.2026) பட்டுக்கோட்டையில் நடைபெறும் கழகத் தோழர்கள் கே.வெங்கடேசன் அவர்கள் இல்லத் திருமண நிகழ்விலும், பொன்.இரமேஷ் அவர்கள் புதுமனையை திறந்து வைக்கிற நிகழ்விலும் கலந்துகொள்வதற்காக ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் பட்டுக்கோட்டைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வருகை தர உள்ளார்கள். சட்டமன்ற எதிரக்கட்சித் தலைவராக பொறுப்பேற்றதற்கு பின்பு முதல் முறையாக பட்டுக்கோட்டைக்கு வருகை தருகிறார்கள்.



“வாராது வந்த மாமணியாய்” நமக்கு கிடைத்துள்ள “இளம்தலைவர்” எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வரும்போது அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோர் சிலை களுக்கு அருகில் (ஆலடிக்குமுளை பைபாஸ்) இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு தர உள்ளோம்.

காவிரி தண்ணீர் உரிய காலத்தில் நமக்கு கிடைக்காததாலும், பருவ மழை பொய்த்துவிட்டதாலும் டெல்டா மாவட்டங்கள் வறண்ட பாலைவனமாய் காட்சி தரும் இந்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் அழுத்தமாக எடுத்துச் சொன்னதோடு விவரம் தெரியாத முதல்வர் குறுவை ஊக்கத்தொகையை” வறட்சி நிவாரணம் என்று தவறாகக் குறிப்பிட்டு பதில் சொல்லிய போது நீங்கள் அறிவித்திருப்பது ஊக்கத் தொகை, நான் கேட்பது நிவாரணம் என்று அடுத்த நொடி நமக்காக குரல் கொடுத்தவர் நம் இளம் தலைவர்.

நடந்து முடிந்த சட்டமன்றத்தில் நாம் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கலாம், ஆனால் “விழுந்த வேகத்தில் எழும் ஆற்றல் தி.மு.கவுக்கு உண்டு” என்ற நம் வரலாற்றை நிரூபிக்கின்ற வகையில் அலைகடலென ஆர்ப்பரித்து கழகத்தோழர்கள், இளைஞர் அணி தம்பிமார்கள், மகளிர் அணியைச் சேர்ந்த நம் சகோதரிகள், தொழிலாளத் தோழர்கள், கழக நிர்வாகிகள் என பெருந்திரளாக கலந்து கொண்டு இளைஞர் அணி செயலாளர் அவர்களுக்கு மிகப்பெரிய வரவேற்பை தருகின்ற வகையில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜெயங்கொண்டம் அரசு தலைமை மருத்துவமனை

# போதை மன்னர்களின் கூடாரமாக மாறி வருகிறது! கண்டுகொள்ளாத த.வெ.க. அரசு!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு!

அரியலூர், ஆக.23-

ஜெயங்கொண்டம் பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக ஜெயங்கொண்டம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்கள்

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 80,000 சதுர அடி பரப்பளவில் 7 தளங்கள் மற்றும் 100 படுக்கைகள் வசதி கொண்ட சிறப்பு அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் திறந்து வைக்கப்பட்டு பொதுமக்கள் பெருமளவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்புதிய மருத்துவமனை கட்டடத்தின் கீழ் தளத்தில் (Ground Floor) சமையலறை, நோயாளிகள் உடனிருப்போர் காத்திருக்கும் இடம், மருந்தகம் மற்றும் மருந்து கிடங்கு, CSSD, முதலாவது தளத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, குழந்தைகளுக்கான உயிர்த்தெழுதல் மற்றும் அவசர மருத்துவ சிகிச்சை பிரிவு, இரண்டாவது தளத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் பச்சை மண்டலம் (TAEI Green Zone) மூன்றாவது தளத்தில் சித்த மருத்துவ பிரிவு, ஆயர் வேதா, யோகா மற்றும் நேச்சுரோபதி, யுனானி சித்தா மற்றும் ஹோமியோபதி பிரிவுகளும் செயல்பட்டு வருகிறது. நான்காம் தளத்தில் ஆண்கள் பொது மருத்துவ உள் நோயாளிகள் பிரிவு, ஆண்கள் அறுவை சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு, ஐந்தாவது தளத்தில் பெண்கள் பொது மருத்துவ உள் நோயாளிகள் பிரிவு, பெண்கள் அறுவை சிகிச்சை உள்நோயாளிகள் பிரிவு மற்றும் ஆறாவது தளத்தில் அலுவலகம், பொது அறுவை சிகிச்சை அரங்கம், எலும்பியல் அறுவை சிகிச்சை அரங்கமும் செயல்படும் வகையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்ட மருத்துவமனை இன்று போதை மன்னர்களின் கூடாரமாக மாறிவருகிறது.

மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ஜெயங்கொண்டம் சுற்றியுள்ள சுமார் 69 க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து சிகிச்சை பெறுவதற்காக சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தினந்தோறும் இம் மருத்துவமனைக்கு வருகின்றனர்.

இந்த தலைமை மருத்துவ மனையில் உள்நோயாளிகள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோயாளிகளின் உடன் வருபவர்களை நோயாளிகளின் பாதுகாப்புக்கு ஒருவரை தவிர தங்கவிடுவதில்லை,

மிகவும் பாதிக்கப்பட்ட நோயாளிகளை பாதுகாக்க இரண்டு நபர்கள் தேவைப்படுவார்கள் அவர்களை மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுவதில்லை.

அதே சமயம் நோயாளிகளுக்கு ஏதேனும் அவசரப் பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு உதவுவதற்கும் அவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கித் தருவதற்கும் புதிதாக கட்டடப்பட்டுள்ள தரைத்தளத்தில் நோயாளிகளின் உறவினர்கள் இரவில் படுத்து உறங்கி ஓய்வெடுத்து வருகின்றனர். மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுக்கு சம்பந்தம் இல்லாத நபர்கள், போதை மன்னர்கள் மருத்துவமனையில் இரவு ஓய்வெடுக்கும் பகுதி மற்றும் மருத்துவமனை வளாக பகுதியில் இரவு நேரத்தில் அங்கு வந்து படுத்துக்கொண்டு போதையில் சத்தம் போட்டு பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றனர். அந்த நபர்களால் நோயாளிகளின் உறவினர்கள் ஓய்வெடுக்கவோ, தங்கவோ மிகவும் சிரமப்படுகின்றனர். குறிப்பாக தங்கள் அணிந்திருக்கும் நகை, மற்றும் பணம், கைபேசி உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுவிடுமோ என்று அச்சத்துடன் தூங்காமல் இரவு முழுவதும் விழித்துக்கொண்டே எப்பொழுது விடியும் என்று காத்திருக்கின்றனர். நோயாளிகள் தங்கும் அந்த இடத்தில் மருத்துவ கழிவுகள், உள்ளிட்ட குப்பைகளை கொட்டி ஒரே தூர் நாற்றம் வீசுகிறது. இத்தனை கோடி ரூபாயில் கட்டிய மருத்துவ மனை தவெக அரசின் அலட்சியத்தால் பாழ்பட்டு வருகிறது. எனவே மாவட்ட நிர்வாகம், காவல்துறை நிர்வாகமும் மருத்துவ மனை நிர்வாகமும், உரிய பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தி தரவேண்டும் என நோயாளிகளின் உறவினர்கள், பொதுமக்கள் கேட்கின்றனர். மேலும் நோயாளிகளுடன் தங்குகின்றவர்களுக்கு மருத்துவமனையில் பாஸ் வழங்கினால் தேவை இல்லாத நபர்கள் அங்கு தங்க முடியாது, எந்த பிரச்சினைகளும் ஏற்படாது.

மருத்துவமனை நிர்வாகம் செய்து தருமா என பொதுமக்கள் கேட்கின்றனர்.

இரவு நேரங்களில் காவல்துறையினர் மருத்துவமனை வளாகத்தில் ரோந்து வந்தால் நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும், பாதுகாப்பாக இருக்கும் என்று நோயாளிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திராவிட மாடல் ஆட்சியில் பொதுமக்களுக்காக 25 கோடி ரூபாயில் கட்டப்பட்ட 7 தளம் கொண்ட ஜெயங்கொண்டம் தலைமை மருத்துவமனையை தவெக அரசு சுகாதாரத்தோடும், பாதுகாப்போடும் காப்பாற்றுமா பொதுமக்களின் எதிர்பார்க்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலவயல் சுப்பையா
### ஆகஸ்ட் 23 (2020)



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருமயம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும், மாவட்ட திருக்கோவில்கள் அறங்காவலர் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.